ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2156/3 - 2019 දෙසැම්බර් මස 30 වැනි සඳුදා - 2019.12.30

*2156/3 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டம்**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பணிகளையும், அரசியலமைப்புச் சட்டத்தின் 44 (5) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அதாவது கீழே முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறிப்பான பணிகளை மேற்பார்வை செய்து நிறைவேற்றும் பொறுப்பையும் அதிகாரத்தையும், பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜோன் செனவிரத்ன அவர்களுக்கும் கீழே இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறிப்பான பணிகளை மேற்பார்வை செய்து நிறைவேற்றும் பொறுப்பையும் அதிகாரத்தையும் அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் திட்ட இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ அவர்களுக்கும் ஒப்படைக்கப்படுகின்றது என்பதையும் அதே போன்று இந்த முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணைகள் இரண்டிலும் உள்ளடங்கியுள்ள விடயப் பரப்பிற்குள் வருகின்ற சகல பணிகள் சம்பந்தமாகவும் தேடிப்பார்த்தல், தலையீடு செய்தல் மற்றும் கூட்டிணைக்கும் சந்தர்ப்பங்கள் தொடர்ந்தும் மேற்சொன்ன இராஜாங்க அமைச்சர்கள் இருவருக்கும் இருக்கின்றது என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*செயலகம்,*
*கொழும்பு 01,*
*2019, திசெம்பர் 30.*

## முதலாம் அட்டவணை

### பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்* |
| 1. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தல்.<br><br>2. தேசிய கொள்கைகளுக்கு இணங்கியதாக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.<br><br>3. தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய கொள்கைகளைத் தயாரித்தல்.<br><br>4. பொருளாதார அபிவிருத்தியின் போது தனியார் துறையின் பங்குபற்றுதலை இலகுபடுத்துவதற்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் அரசாங்க மற்றும் தனியார் துறைகளைக் கூட்டிணைத்தலும். | 1. தேசிய திட்டமிடல் திணைக்களம்<br><br>2. அரச தொழில் முயற்சித் திணைக்களம்<br><br>3. வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்<br><br>4. தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்<br><br>5. விலைமதிப்பீட்டுத் திணைக்களம்<br><br>6. கம்பனி பதிவாளர் திணைக்களம்<br><br>7. வர்த்தகத் திணைக்களம்<br><br>8. நிலைபேறான அபிவிருத்தித் திணைக்களம் | • வியாபாரப் பெயர்ச் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம்)<br><br>• கம்பனிச் சட்டம் (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம்)<br><br>• வியாபார அடையாளச் சட்டம் (1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கம்)<br><br>• தொகைமதிப்புச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கம்)<br><br>• நிலைபேறு அபிவிருத்திச் சட்டம் (2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம்) |

## இரண்டாம் அட்டவணை

### அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் திட்ட இராஜாங்க அமைச்சர்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்* |
| 1. இலங்கை மத்திய வங்கியுடனான ஒருங்கிணைப்பில் நிதிக் கொள்கைகளைத் தயாரித்தலும் பேரண்டப் பொருளாதார முகாமையும்.<br><br>2. அபிவிருத்தி வங்கி மற்றும் நிதி முகவர் நிறுவனங்கள் தொடர்பான முகாமைத்துவ நடவடிக்கைகள். | 1. அபிவிருத்தி நிதித் திணைக்களம்<br><br>2. கடன் தகவல் பணியகம்<br><br>3. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்<br><br>4. பிரதேச அபிவிருத்தி வங்கி | • இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம்)<br><br>• வங்கிச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கம்) |

**இரண்டாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

**அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் திட்ட இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்* |
| | 5. அரச ஈட்டு முதலீட்டு வங்கி | • வங்கிகளினால் அளிக்கப்படும் கடன்களை அறவிடும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம் (1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம்) |
| | 6. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | |
| | 7. லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி | • பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கம்) |
| | | • இலங்கை அரசாங்க ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டம் (1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கம்) |
| | | • வீடமைப்பு அபிவிருத்தி நிதிசார் கூட்டுத்தாபனச் சட்டம் (1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம்) |
| | | • செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் (1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கம்) |

12-472

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.